# ஒற்றுமையாய் வாழ்வதிலே உண்டு நன்மையே!

தற்போது ஏராளமான முரண்பாடுகளும் புதிய பிரச்சனைகளும் நோய்களும் துன்பங்களும் துயரங்களும் மனிதகுலத்திற்கு சவாலாகவே இருக்கின்றது. நம்மில் பெரும்பாலானோர் இத்தகைய மனிதகுலத்திற்கு முரண்பாடான விடயங்களில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். உதாரணமாக ஒரு செய்தியை செய்தித்தாளிலோ அல்லது சமூக வலைத்தளங்களிலோ படிக்கின்ற நாம் அந்தச் செய்தியின் உண்மைத்தன்மை என்ன என்பதை அறியாது உடனடியாகவே அந்தச் செய்தியைப் பரப்புகின்ற ஒருவராகவே இருக்கின்றோம். இது தற்செயலாக நடைபெறுவது உண்டு, கவனயீனமாக நடைபெறுவது உண்டு, வேண்டுமென்றே நடைபெறுவதும் உண்டு. இவ்வாறு நாம் பொறுப்பற்ற விதமாக செயற்படுவதன் காரணமாக உலகம் முழுவதும் முரண்பாடுகள் மிகுந்து காணப்படுகின்றது. இது தேவையற்ற பிரச்சினைகளை மனிதகுலத்திற்கு உருவாக்குகின்றது. அமைதியைக் கெடுக்கின்றது. நிம்மதியை அழிக்கின்றது. சமாதானமும் அமைதியும் நிலவக்கூடிய ஒரு சூழ்நிலை இவ்வாறு நம்மாலேயே கெடுக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் இலங்கையில் ஏற்பட்ட வன்முறைகள் பற்றி நாம் ஆழமாக நோக்குகின்ற பொழுது இந்த நிலமை நன்கு நமக்கு புலப்படும். ஒரு விடயத்தை கேள்விப்பட்ட உடனே இந்த விடயம் நடந்திருப்பதற்கான சாத்தியம் என்ன, இதன் உண்மைத்தன்மை என்ன, இதற்கான ஆதாரங்கள் என்ன என்பதை ஆராயாமல் எழுந்தமானமாகவே நாம் அறிந்த விடயத்தை மற்றவர்களுக்கு கூறுகிறோம் அல்லது சமூக வலைத்தளங்கள் ஊடாக பரப்புகின்றோம் இது மிகவும் பாதகமான நிலமைக்கு எம்மை இட்டுச்செல்கின்றது. எம்தலையிலே நாம் மண்ணைப் போட்டுக் கொள்கின்றோம். இப்படிப் பொய்யான வதந்திகளாலும் செய்திகளாலும் சிலவேளை நாமும் பாதிக்கப்படக்கூடும். இந்த உண்மையை நாம் சிலவேளை மறந்து விடுகின்றோம். கடந்த காலத்தில் இலங்கைத் தீவில் ஏற்பட்ட பல்வகையான முரண்பாடுகள், வன்முறைகள், இனத்துவேச செயற்பாடுகள், வெறுப்புப் பேச்சுக்கள், அமைதியைக் குலைக்கின்ற செயற்பாடுகள் எல்லாமே இவ்வாறுதான் நடைபெற்றது.

மக்கள் தொகையில் மிகக்குறைந்த வீதத்தினரே இத்தகைய நடவடிக்கைகளில் ஆரம்பத்தில் ஈடுபடுகிறார்கள். ஆனால் இவர்களைப் பின்பற்றி பலபேர் தெரிந்தோ தெரியாமலோ இத்தகைய பொறுப்பற்ற விதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இது நிலமையை மேலும் சிக்கலாக்குகின்றது. இலங்கைத்தீவில் ஒரு காலத்தில் எவ்வளவு ஒற்றுமையாக வாழ்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இன்றைக்கு தனித்தனியாகவே பிரியவேண்டி நேரிட்டுள்ளது. ஒருவரையொருவர் சந்தேகிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஒருவர் மீது ஒருவர் காழ்ப்புணர்ச்சி கொள்ளும் நிலை உருவாகியுள்ளது. இந்த நிலமை மாற்றப்பபாடாதுவிட்டால் நாம் எப்படி அமைதியாக சுதந்திரமாக இந்த மண்ணில் வாழமுடியும் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

அண்மைக்காலத்தில் நடைபெற்ற வன்முறைகள் இங்கிருக்கின்ற மக்களை மேலும் கூறுபோட்டுள்ளது. இனி வரப்போகின்ற தேர்தலும் கூட எம்மிடையே இருக்கின்ற இடைவெளியை பெருப்பித்துவிடக் கூடாது என்பதில் நாம் அதிக கவனம் செலுத்தவேண்டும். ஜனநாயகப் பண்புகளுக்கு மதிப்பளித்து நாட்டில் சமாதானம், சாந்தி, ஒற்றுமை, சுபீட்சம் நிலவவேண்டும் என்பதை மனதில் இருத்தி நாம் தேர்தலிலே எமக்கு விரும்பியவர்களுக்கு வாக்களிக்கலாம். அதேவேளையில் வெறுப்புப் பேச்சுக்கள், ஒருவரையொருவர் குறைகூறுவது, வன்செயல்களில் ஈடுபடுவது போன்ற செயற்பாடுகளிலிருந்து நாம் விலகியிருக்க வேண்டும். ஒருசிலருடைய சுயலாபங்களுக்காக ஒரு சமூகமோ அல்லது பல சமூகமோ படுகுழியில் தள்ளப்படுவதை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது. நாம் அனைவதும் இலங்கைத்தாயின் பிள்ளைகள் என்பதை உணர்ந்து அனைத்து இன, மத மக்களும் ஒற்றுமையாக இருக்க முயற்சிக்க வேண்டும்.

நாட்டில் சமாதானம் இருந்தால் தான் அபிவிருத்தி ஏற்படும். கடந்தகால யுத்தங்களினாலும் வன்செயல்களினாலும் எமது அபிவிருத்தி மிகவும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. எமது பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கின்றது. மக்களின் அமைதி அழிந்திருக்கின்றது. நிம்மதி போய்விட்டது. எதிர்கால சந்ததியினராவது இம் மண்ணில் அமைதியோடு வாழ்வதற்கு நாம் அனைவரும் வழிவகுக்க வேண்டும். பகைமை, வெறுப்பு, பேதங்கள் என்பவற்றைத் தள்ளி வைத்துவிட்டு அன்பு, சமாதானம், நேசத்துடன் பழகுதல், இன மத

ஒற்றுமை என்பவற்றை மனதில் இருத்தி நாம் செயற்பட வேண்டிய காலகட்டத்திற்கு வந்திருக்கின்றோம். யார் என்ன சொன்னாலும் உண்மை ஒருபோதும் அழிவதில்லை. தற்காலிகமாக வெல்பவர்கள் எல்லோரும் நிரந்தரமாக அந்த வெற்றியைக் கொண்டாட முடிவதில்லை. இது உலக வரலாற்றில் நாம் அனைவரும் கற்றுக்கொண்ட ஒரு பாடம். எனவே நாம் அனைவரும் இம் மண்ணில் நல்லது செய்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

எமக்குள் உள்ள பிரச்சனைகளை முடிந்தவரையில் மனம்விட்டு பேசி இணைந்து செயற்பட முயற்சிக்க வேண்டும். எமக்குள் உள்ள இடைவெளிகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும். உண்மையிலேயே இன்றைய நிலையில் சகல இனமும் அனைத்து மதத்தவர்களும் இன்னொருவரில் தங்கி வாழுகின்ற நிலைதான் இருக்கின்றது. கல்வியாகட்டும், பொருளாதார வளர்ச்சியாகட்டும், சமூக நடவடிக்கையாகட்டும் அனைத்திற்கும் நாம் இன்னொருவரில் தங்கித்தான் வாழுகின்றோம். இந்நிலையில் குழப்பம் ஏற்படாது, வன்முறை ஏற்படாது, இடைவெளி ஏற்படாது இருக்க வேண்டுமானால் நம் பிள்ளைகளின் எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டுமானால் நாம் அனைவரும் நிதானமாக சிந்தித்து செயற்பட வேண்டிய காலம் இது.

மதத்தைப் போற்றுகிறோம், இறைவனை வழிபடுகின்றோம், ஆனால் மதவெறி பிடித்து அலைகின்றோம். நாம் எமது சமயங்களை உண்மையில் பின்பற்றுவதாக இருந்தால் எமது மதங்கள் போதிக்கும் அன்பைத்தான் நாம் வெளிக்காட்ட வேண்டும். ஆனால் சமயங்களை குறிப்பிடுகின்ற மனிதர்கள் அந்த சமயங்களின் பெயரால் வன்முறையை துாண்டிவிடுகிறார்கள். அதேபோல ஒவ்வொரு காலகட்டத்திலும் இங்கு பலர் முன்னணியில் திகழ்ந்தார்கள். பல இன மக்கள் முன்னணியில் இருந்தார்கள். ஆனால் அவர்கள் தொடர்ந்தும் அவ்வாறே இருக்க முடியவில்லை. ஏனென்பதை நாம் இந்த வேளையில் சிந்தித்துப்பார்க்க வேண்டும். எல்லோரும் இணைந்து எல்லோரும் சகஜமாக இருந்து எல்லோருக்கும் விட்டுக்கொடுத்து நல்லதொரு புதிய இலங்கையை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும். ஒருவருக்கொருவர் பிரிவினைபேசி ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி மனிதகுலத்திற்கு வேண்டாத செயற்பாடுகளில் இறங்கி நாம் அனைவரும் அழிந்து போகக்கூடாது.

நல்ல செயற்பாடுகளில் முன்னுதாரணமாகக் காட்டக்கூடிய மாந்தர்கள் உலகத்தில் ஒரு சிலர்தான் பிறந்தார்கள். அந்த மாந்தர்களின் நல்வழியைப் பின்பற்றித்தான் உலகம் இன்றைக்கும் வளர்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால் பெரும்பாலான மக்கள் இன்றைக்கு வேண்டத்தகாத விடயங்களைப் பின்பற்றி மனிதகுலத்திற்கு ஒவ்வாத காரியங்களில் ஈடுபட்டு மனிதனை மனிதன் கொலை செய்து மனிதனை மனிதன் சுரண்டி வாழ்வதன் காரணமாகத்தான் இந்த அனர்த்தங்கள் அனைத்தும் நடக்கின்றது. இயற்கை அனர்த்தங்கள் ஒருபுறம் மனிதனால் உருவாக்கப்படுகின்ற அனர்த்தங்கள் இன்னொருபுறமாக இந்த உலகை அழித்துக் கொண்டிருக்கின்றது. இன்றைக்கு கொரோனோ வைரஸ் என்று உலகமெல்லாம் பீதியடைகின்றபொழுது சக்திமிக்க மனிதர்கள் ஆட்சிகள் என்று சொல்லப்படுகின்ற அனைத்தும் இதற்கு முன்னால் மண்டியிட்டுப் போகின்றன. அவற்றிற்கு ஒன்றுமே செய்ய முடியாத நிலையிலே இருக்கின்றன. எனவே இது இறைவனின் தீர்ப்பு என்று கூட நாம் எண்ணத் தோன்றுகிறது.

எனவே நல்லதொரு எதிர்காலத்தை நோக்கி நாம் அனைவரும் இணைந்து கைகோர்த்துப் பயணிக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து எல்லோரும் ஒற்றுமையாக வாழ்ந்து இலங்கைத்திருநாட்டின் சிறந்த பிரஜைகளாக வாழ முற்படுவோமாக!!.


**அம்பாறை மாவட்ட சமய நல்லிணக்க குழு DIRC**
**தேசிய சமாதானப் பேரவை**

**SOND**
**அக்கரைப்பற்று.**
077 331 4262
**senthu@eureka.lk**